VIRUDHUNAGAR MUNICIPALITY
FORM 3
Minutes of the Meeting held on 19.01.2021

| Date of Council meeting | Decision Number | Subject of the Agenda | Resolution |
|---|---|---|---|
| 19.01.2021 | 840 | **பொருள் – 1**<br>இந்நகராட்சிப் பகுதிகளில் 15வது மத்திய நிதிக்குழு திட்டம் 2020–21ம் ஆண்டின் கீழ் நகராட்சிக்குட்பட்ட மாத்தநாயக்கன்பட்டி உரக்கிடங்கில் உயிர் உரம் தயாரிக்கும் (Bio-mining) பணிக்கான விரிவான திட்ட அறிக்கை ரூ150.00 இலட்சம் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டுள்ளது.அதற்கான நிதியினை, 15வது மத்திய நிதிக்குழு 2020–21ன் கீழ் ரூ.92,66,094/–ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகையான ரூ.57,33,906/–னையும் முழு மான்யமாக வழங்கக் கோரியும் திட்டக் கருத்துவினை நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>கோப்பு எண்.7314–1/19/இ1 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 841 | **பொருள் – 2**<br>இந்நகராட்சிக்குட்பட்ட கட்டையாபுரம் ரோடு, பவுண்டு தெரு, ஐ.சி.ஏ காலனி (மெயின் ரோடு) ,கால்நடை மருத்துவமனை ரோடு குறுக்குத் தெருக்கள் 1,2 மற்றும் நகராட்சி எல்லை அருகில் மற்றும் பழைய அருப்புக்கோட்டை ரோடு ஆகிய தெருக்களில் பேவர் இயந்திரம் மூலம் தார்ச்சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மற்றும் மாத்தநாயக்கன்பட்டி பாதை ரோடு குறுக்குத் தெருக்கள், பவுண்டுத் தெரு குறுக்குத் தெருக்கள், சவுண்டம்மன் கோயில் தெரு, முத்துராமன்பட்டி தெரு, ராமன் தெரு, ஐ.சி.ஏ.காலனி (வசந்தா வீதி அருகில்) ,வசந்தா வீதி ,ராஜ வீதி மற்றும் சவுண்டி தெருக்கள் 1மற்றும் 2. ஆகிய தெருக்களில் பேவர் பிளாக் தளம் அமைத்தல் பணி. (25,30,31,32,33,35 மற்றும் 36) ,சிப்பம் 1, ரூ144.75 இலட்சம் மதிப்பீட்டில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21 நிதியில் இருந்து மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.823 நாள் 10.12.2020ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 12.01.2021ல் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. மின்னனு ஒப்பந்தப்புள்ளி மூலம் எந்தவித ஒப்பந்தப்புள்ளிகளும் பெறப்படவில்லை ஆப் லைன் மூலம் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவை பின்வருமாறு.<br>1. திரு.டி.சிவக்குமார்,ஒப்பந்ததாரர்,விருதுநகர்<br>2. திரு.கே.ஜி.ராஜகுரு,ஒப்பந்ததாரர்,விருதுநகர்<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் பிரதான உறை,தொழில் நுட்ப உறை 12.01.2021 அன்று திறக்கப்பட்டு கூர்ந்தாய்பு குழுவினரால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தேவையான அனைத்து சான்றிதழ்கள் இணைக்கப்பட்டுள்ளதின் பேரில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தகுதியானவை என தீர்மானிக்கப்பட்டு 18.01.2021 அன்று விலை உறை (Price Bid) திறக்கப்பட்டு இரண்டு விலைப்பட்டியல்களும் மதிப்பீட்டு விலைக்கு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.<br><br>1. திரு.டி.சிவக்குமார்,ஒப்பந்ததாரர், விருதுநகர் – 8.02 சதவிகிதம் மதிப்பீட்டு விலையை விட அதிகம்<br>2. திரு.கே.ஜி.ராஜகுரு,ஒப்பந்ததாரர்,விருதுநகர் – 4.74 சதவிகிதம் மதிப்பீட்டு விலையை விட அதிகம்.<br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு. கே.ஜி.ராஜகுரு என்பவர் மதிப்பீட்டைக் காட்டிலும் 4.74 சதவிகிதம் அதிகமான (வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி) அளித்துள்ளார்.மதிப்பீட்டைவிட கூடுதலான சதவிகிதம் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதால் ஒப்பந்ததாரரிடம் விலைகுறைப்பு செய்து தர இந்நகராட்சியில் இருந்து சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு 18.01.2021ல் கடிதம் அனுப்பப்பட்டது.அதன்படி கே.ஜி.ராஜகுரு , ஒப்பந்ததாரர் 18.01.2021ந் தேதியில் விலைகுறைப்பு செய்ய இயலாது என கொடுத்துள்ளார். அதன்படி இப்பணியானது திட்டப்பணிகள் என்பதால் திரு. கே.ஜி.ராஜகுரு ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு-** மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.இ1/4535/2020 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 842 | **பொருள்– 3**<br>இந்நகராட்சிக்குட்பட்ட பேரொலி ரோடு, லெட்சுமி காலனி மெயின் ரோடு,மேற்கு பாண்டியன் காலனி, கச்சேரி ரோடு ( வருமானவரி அலுவலகம் முதல் பிஎஸ்என்எல் அலுவலகம் வரை) மற்றும் வேல்ச்சாமி நகர் ஆகிய தெருக்களில் பேவர் இயந்திரம் மூலம் தார்ச்சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மற்றும் கம்மாபட்டி தெரு 1 மற்றும் 2, ரயில்வே பீடர் ரோடு (காதி கிராப்ட் அருகில்) ,மேற்கு பாண்டியன் காலனி (குறுக்குத் தெருக்கள்), ராமச்சந்திரன் தெரு மற்றும் பரங்கிநாதபுரம் முதல் குறுக்குத் தெரு ஆகிய தெருக்களில் பேவர் பிளாக் தளம் அமைத்தல் பணி, சிப்பம் 2, ரூ155.25 இலட்சம் மதிப்பீட்டில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21 நிதியில் இருந்து மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.823 நாள் 10.12.2020ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 12.01.2021ல் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. மின்னனு ஒப்பந்தப்புள்ளி மூலம் எந்தவித ஒப்பந்தப்புள்ளிகளும் பெறப்படவில்லை ஆப் லைன் மூலம் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவை பின்வருமாறு.<br>1.திரு.டி.சிவக்குமார்,ஒப்பந்ததாரர்,விருதுநகர்<br>2.திரு.கே.ஜி.ராஜகுரு,ஒப்பந்ததாரர்,விருதுநகர்<br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் பிரதான உறை,தொழில் நுட்ப உறை 12.01.2021 அன்று திறக்கப்பட்டு கூர்ந்தாய்பு குழுவினரால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தேவையான அனைத்து சான்றிதழ்கள் இணைக்கப்பட்டுள்ளதின் பேரில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தகுதியானவை என தீர்மானிக்கப்பட்டு 18.01.2021 அன்று விலை உறை (Price Bid) திறக்கப்பட்டு இரண்டு விலைப்பட்டியல்களும் மதிப்பீட்டு விலைக்கு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.<br>1.திரு.டி.சிவக்குமார்,ஒப்பந்ததாரர், விருதுநகர் – 4.77 சதவிகிதம் மதிப்பீட்டு விலையை விட அதிகம்<br>2.திரு.கே.ஜி.ராஜகுரு,ஒப்பந்ததாரர்,விருதுநகர் – 8.00 சதவிகிதம் மதிப்பீட்டு விலையை விட அதிகம்.<br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு. டி.சிவக்குமார், என்பவர் மதிப்பீட்டைக் காட்டிலும் 4.77 சதவிகிதம் அதிகமான (வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி) அளித்துள்ளார்.மதிப்பீட்டைவிட கூடுதலான சதவிகிதம் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதால் ஒப்பந்ததாரரிடம் விலைகுறைப்பு செய்து தர இந்நகராட்சியில் இருந்து சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு 18.01.2021ல் கடிதம் அனுப்பப்பட்டது.அதன்படி டி.சிவக்குமார், ஒப்பந்ததாரர் 18.01.2021ந் தேதியில் விலைகுறைப்பு செய்ய இயலாது என கொடுத்துள்ளார். அதன்படி இப்பணியானது திட்டப்பணிகள் என்பதால் திரு. டி.சிவக்குமார், ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு-** மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.இ1/4535/2020 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |